DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 13/2021**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அஜித்குமார் | Caste | : | |
| Father Name | : | ரவி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **09.02.2026**

**PW - 13**

**(1** முதல் **3** எதிரிகள் ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் திருச்சி மாவட்டம், இலால்குடி தாலுக்கா, பெருவளநல்லூரில் வசிக்கிறேன். முன்பு பால் வியாபாரம் செய்தேன். தற்போது நான் விவசாயம் செய்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன பெரியசாமி என்பவரை தெரியும். அவர் எனக்கு தாத்தா முறை வேண்டும். அவரது மகன்கள், மனைவி மற்றும் உறவினர்களைத் தெரியும். கடந்த 19.01.2020 அன்று காலை 05.30 மணிக்கு பெரியசாமி அவரது வீடு அருகே உள்ள புள்ளம்பாடி வாய்க்காலுக்கு குளிக்க சென்றார். அவர் திரும்பி வரவில்லை. அவரது மகன்கள் மற்றும் உறவினர்கள், நானும், பெரியசாமியின் மகன்கள் மற்றும் அவரது உறவினர்கள் ஆகியோரும் அந்த ஆற்றில் பெரியசாமியை தேடினோம். அதன்பிறகு புள்ளம்பாடி புதுப்பாலம் அருகே ஆற்றில் ஒரு உடல் மிதந்து வந்தது. தீயணைப்பு துறையினர் அங்கு வந்து அந்த உடலை தூக்கி கரையில் போட்டார்கள். அது பெரியசாமி உடலாகும். அவர் இறந்துவிட்டார். அவருக்கு கழுத்து, இடது கை ஆகிய இடங்களில்

வெட்டுக்காயங்கள் இருந்தன. போலிசார் என்னை விசாரித்தார்கள். ாநன் யார் மீதும் சந்தேகமிருந்ததாக சொல்லவில்லை. மேற்படி விபரங்களை போலிசாரிடம் சொன்னேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

பெரியசாமி அன்று ஆற்றுக்கு குளிக்க போனது எனக்கு நேரடியாக தெரியாது. அவரது மகன்கள் சொல்லி தெரியும். அவரது உடலை புள்ளம்பாடி வாய்க்கால் அருகே தேடி கண்டுபிடித்தது தான் எனக்கு தெரியும். அவர் எப்படி இறந்தார் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது.

**மறுவிசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.